ORIGINAL ARTICLE

# சீவக சிந்தாமணியில் கற்பியல்
# [CĪVAKA CINTĀMAṆIYIL KAṞPIYAL]

## SIVAGA CHINTHAMANI AND NORM OF PURITY

**இந்திரா இராமையா / Indra Ramiah *[1]**

[1] Cheras Tamil Primary School, Kuala Lumpur, Malaysia.
Email: indraramiah23@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/198

**Abstract**

From the Sangam period onwards, Aimperungappiyams developed the specialty of the Tamil language. Sivaga Chintamani is one of epic of the Aimperungappiyams. The epic was composed in the 9th century by a Jain monk named Tiruttakkathevar. Sivagan was the leader of this epic. The epic is named as Sivaga Chintamani as it tells the life story of Sivagan. Sivaga Chintamani has 3145 poems and 13 chapter. Sivaka Chintamani is a book on Jainisme. Sivagan married 8 women in this book, so this book also be called Mananool. Although the book is about love story, it is full of cultural elements. The characters in Sivaga Chintamani shows the purity norm in a very modern way. Moreover, in this book, purity is mentioned from many perspectives. Through this study, it is possible to know that the life of the Sivagan and others characters is full of the Tamil cultural element of purity. Moreover, this study will be very helpful to change the view of Sivaga Chintamani which is considered only as a marriage book.

**Keywords:** Epic, Aimperungappiyams, cultural, Sivaga Chintamani, Sivagan, Purity

**ஆய்வுச் சாரம்**

சங்கக் காலம் முதலே ஐம்பெரும்காப்பியங்கள் தமிழ்மொழியின் சிறப்பை வளர்த்தன. ஐம்பெருங்காப்பியங்களில் ஒரு காப்பியம் சீவகச் சிந்தாமணி. திருத்தக்கதேவர் எனும் சமண துறவி கிபி 9ஆம் நூற்றாண்டில் இக்காப்பியத்தை இயற்றினார். இக்காப்பியத்தின் தலைவன் சீவகன் ஆவான். சீவகனின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதால் இக்காப்பியம் சீவகச் சிந்தாமணி எனப் பெயர்பெற்றது. சீவகசிந்தாமணி 3145 செய்யுட்கள் 13 இலம்பகம் கொண்டது. சீவகச் சிந்தாமணி ஒரு சமண சமயத்தைச் சார்ந்த நூலாகும். சீவகன் இந்நூலில் எண்மரை திருமணம் செய்ததால் இந்நூலை மணநூல் என்றும் அழைப்பர். இந்நூல் மணநூலாகத் திகழ்ந்தாலும் பண்பாட்டு கூறுகள் இவற்றில் நிரம்பி உள்ளன. சீவகச் சிந்தாமணியில் உள்ள கதை மாந்தர்கள் கற்பு நெறியை மிகவும் நூதனமாகக் காட்டியுள்ளனர். அதுமட்டுமின்றி, இந்நூலில் கற்புநெறியைப்

பல கண்ணோட்டத்தில் எடுத்துரைத்துள்ளனர்.இந்த ஆய்வின் மூலம் பல திருமணம் புரிந்தாலும் காவியத் தலைவனின் வாழ்விலும் மற்ற கதாமாந்தர்கள் வாழ்வில் கற்பு நெறி எனும் தமிழர் பண்பாட்டுக் கூறு நிறைந்துள்ளது என அறிந்து கொள்ள முடிகிறது. அதுமட்டுமின்றி, ஒரு மணநூலாக மட்டுமே கருதப்படும் சீவகச் சிந்தாமணியைப் பற்றிய கண்ணோட்டத்தை மாற்ற இந்த ஆய்வு மிகவும் உறுதுணையாக அமையும்.

**கருச்சொற்கள்:** காப்பியம், ஐம்பெருங்காப்பியம், பண்பாடு, சீவகச் சிந்தாமணி, சீவகன், கற்பு

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 19th Dicember 2021, revised 26th January 2022, accepted 18th February 2022

**முன்னுரை**

உலக மொழிகளில் தொன்மையும் பழமையும் கொண்ட மொழி எனும் பெருமை தமிழ் மொழியையே சேரும்.சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட தமிழ் மொழியை தேவநேயப் பாவாணர் உலக மொழிகளின் தாய் எனப் பகர்ந்துள்ளார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இலக்கணம் வகுத்த வளமையும் வியன்மையும் கொண்டது பைந்தமிழ். சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சமய இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள் தனிமனித பரிமாண வளர்ச்சியைச் செப்பணிட்டு காட்டுகின்றன. இத்தகு திருமை மிக்க தமிழ்மொழியின் மணிமகுடமாகத் திகழ்வன ஐம்பெருங்காப்பியச் செல்வங்களாகும். பெருங்காப்பியப் பேறுகள் எல்லாம் பெற்றுத் திகழும் காப்பியம் சீவக சிந்தாமணி. கற்பனை வளம், கருத்து முழுமை, உவமை வளம், தொடர் அழகு போன்ற கூறுகள் நிறைந்து உள்ளன (அரசுமணி,1985)[1]. சீவக சிந்தாமணி என்னும் செந்தமிழ்க் காப்பியம் திருதக்க தேவரால் கிபி 9ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. அவர் திருத்தகு முனிவர், திருத்தகு மகாமுனிவர், திருத்தக்க மாகமுனிகள் என்றும் அழைக்கப்பட்டார். திருதக்கதேவர் வாழ்ந்த காலம், இடம் மட்டுமல்லாது வளர்ந்த சமயமும் கொள்கையும் சமணம் தழுவி இருப்பினும் செந்தமிழில் அவர் காப்பியம் இயற்றியதால் நூலாசிரியரின் புகழ் காலத்தைக் கடந்து ஓங்கி நிற்கிறது எனில் மிகையாகாது. சீவகனின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதால் இக்காப்பியம் சீவக சிந்தாமணி எனப் பெயர் பெற்றது. சீவகசிந்தாமணி 3145 செய்யுட்களையும் 13 இலம்பகங்களையும் கொண்டது. காவியத்தலைவன் சீவகன் தேவியர் எண்மரை மணந்ததால் இந்நூலை மணநூல் என்றும் அழைப்பர் (ஜெபமணி, 2013)[2].

இந்நூலில் காதலறமும் வாழ்க்கை நலமும் விருத்தப்பா வடிவில் காப்பியம் முழுக்க நிறைந்துள்ளது. நாடு வளம்பெற்று மக்கள் நலம்பெற ஆட்சி செய்ய வேண்டிய சச்சந்த மன்னன் சிற்றின்பத்திற்கு அடிமையாகி அந்தப்புரத்தில் கட்டுண்டு கிடந்ததால் நாட்டையும் வீட்டையும் இழக்க நேரிட்டது எனும் அறத்தை சீவக சிந்தாமணி உணர்த்துகிறது. தனது மண்ணாசையினால் வாழ்வு அளித்த மண்ணையே கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய கட்டியங்காரனின் அழிவின் மூலம் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதைத் தெளிவாக இந்நூல் காட்டுகிறது.மனைவி விசயையின் பேரழகில் மயங்கிக் கிடந்த மன்னன் சச்சந்தனின் தளபதி கட்டியங்காரனே அம்மன்னனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். நிமித்தகன் கூறிய அனைத்து தீய சகுனங்களைக் கண்ட சச்சந்த மன்னன் தன் மனைவி விசையை மயிற்பொறி மூலம் தப்பிக்க

வைத்து அதன் பின் கட்டியங்காரனுடன் போரிட்டு இயற்கை எய்தினார். விசயையின் மயிற்பொறி இடுகாட்டில் இறங்கியது. இடுகாட்டின் வாழும் தெய்வத்தின் துணையுடம் விசயை ஆண்மகனைப் பெற்றாள். இடுகாட்டில் இறந்த தன் குழந்தையைப் புதைக்க வந்த கந்துக்கடன் எனும் வணிகன் விசயையின் மகனைக் கண்டெடுத்தார். அக்குழந்தையை எடுத்துச் சென்று வளர்க்கலானார். அக்குழந்தையே சீவகன். கந்துக்கடன் மகனாக வளரும் சீவகன் மீண்டும் தன் தந்தையின் நாட்டை மீட்டு தாயைச் சந்திக்கிறார். கதை வளர்ச்சியில் சீவகன் எண்மரை திருமணம் செய்து இறுதியில் மனைவிகளுடன் துறவறம் பூண்டார் (மாணிக்கவாசகன், 2007)[3].

**பண்பாடு**

பண்பாடு எனும் சொல்லைப் பண்பு பாடு எனப் பிரிக்கலாம். பண்பு எனப்படுவது உயிர், உயிரினங்கள் ஆகியவற்றின் குணமாகும். ஆங்கிலத்தில் culture எனும் சொல்லின் நேரடி விளக்கமே பண்பாடு ஆகும். பயிரிடுவதற்கு ஏற்றவாறு நன்கு செய்யப்பட்ட நிலம் நன்செய் நிலமாகும். அதுவே, பண்படுத்தப்பட்ட நிலம் என்றும் சொல்லப்படும். பக்குவப்பட்ட மனிதனையும் பண்பட்ட மனிதன் என்பர். இப்பாண்பாடு மக்கள் வாழும் மண்ணின் தன்மையைச் சார்ந்தது. உணவு, உடை, இருப்பிடம் பழக்க வழக்கம், வாழும் நெறிமுறைகள் ஆகியன இவற்றுள் அடங்கும் (விவேகானந்த கோபால், 2013)[4]. தொடர்ந்து,

*பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல் (கலித்தொகை: 113)*

கலித்தொகையில் உலக நடைமுறையினையும் சமுதாயம் ஒத்துக்கொண்ட நெறிகளையும் பொருந்தி நடத்தலே மேதக்க பண்பாடு எனப்படுகிறது (ஜெயலெட்சுமி, 2013)[5].

அடுத்து,

*நயனும் நண்பும் நாணும் நன்குடைமையும்*
*பயனும் பண்பும் பாடறிந் தொழிகலும்*
*நும்மினும் உடையேன் மன்னோ (நற்றிணை 160:1-3)*

நற்றிணையில் பண்பாடு எனப்படுவது யாவருக்கும் இனிமை தரும் பாங்கில் நடத்தல், வேறுபாடு கருதாது யாவரிடமும் அன்பு பாராட்டித் தொடர்புற்று வாழ்தல், பழியினைக் கண்டு மனங்கூசுதல், சமுதாயத்திற்குப் பயன்பட வாழ்தல் போன்ற அறுவகை இயல்புகளும் பண்பாட்டின் கூறுகளாகப் போற்றப்படுகின்றன (கலியபெருமாள், 2005)[6].

தொடர்ந்து, தமிழ் இலக்கியங்கள் பண்பாட்டின் நிலைக்களன்களாகத் திகழ்கின்றன. சங்கக் கால மக்களின் வாழ்வியலில் ஆய்த போது உயர்பண்பாட்டினையே கொண்டிருந்தனர் எனலாம். ஏனெனில், சங்கப் புலவர்கள் அம்மக்களின் அன்றாட வாழ்வின் அடிப்படையில் ஆடவரும் பெண்களும் எவ்வாறு பண்பாட்டு விழுமியங்களைப் போற்றினர் என்பதனைப் பதிவிட்டுள்ளனர். சிலப்பதிகாரத்தில் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் எனவும், மணிமேகலையில் விருந்தோம்பலையும், கம்பனில் ஒருவனுக்கு ஒருத்தியென வாழ்ந்த இல்லறப் பண்பாட்டையும், பக்தி இலக்கியங்களில் அன்பு நெறிகளைப் பின்பற்றிய பண்பாடுகளையும் காணமுடிகிறது.

சுருங்கக் கூறின், சீரிய வாழ்வியல் முறையைச் சான்றாண்மைத் தன்மையுடன் உலக நடைமுறையும் சமுதாய விழுமியங்களையும் போற்றி ஒத்து ஒழுகுகின்ற இயல்பே பண்பாடு எனப்படுகிறது.

**கற்பு**

ஒருவரின் வாழ்க்கையிலும் சிந்தனையிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் மனிதகுலத்தின் நல்வாழ்வுக்காகப் பண்பாட்டின் சில கூறுகள் இன்றும் தமிழர் குமுகாயத்தில் பராமரிக்கப்படுகின்றன. பதினெண்கீழ்கணக்கு நூலில் பதிக்கப்பட்ட பெண்களின் நெறிமுறைகள் கற்பு, மனைவியின் மாண்பு, மக்கட்பேறு, விருந்தோம்பல், தெய்வத்தை வணங்குதல் ஆகும். பண்டைத் தமிழர்கள் கற்புநெறியை உயிரெனக் காத்தனர் என்பதை பதினெண் கீழ்கணக்கு நூலின் உள்ள குறிப்பைக் கொண்டு அறிய முடிகிறது.

கற்பு என்ற சொல் உறுதி, தூய்மை, ஒழுக்கம் என்ற பொருள்களைத் தருகின்றது. திருமணமான பெண்ணின் ஒழுக்கம் காக்கும் உறுதி எனக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கற்புக்கு விளக்கமளிக்கின்றது. கற்பு என்பது பிற ஆடவர்களால் மனதளவில் எண்ணப்படாத நிலையை உடையது என இரட்டைக்காப்பியமான மணிமேகலை குறிப்பிடுகின்றது (இராஜம், 2013)[7].

*கற்பெனப் படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே (கள.140)*

தொடர்ந்து, தமிழர் பண்பாட்டில் ஒரு பெண்ணின் சீலமும் ஒழுக்கமும் அவளின் கற்பு நெறியை சார்ந்தே அமைகின்றது. கற்பியல் எனப்படுவது யாதெனில், களவு வாழ்விலிருந்து இல்லற வாழ்வியலை மேற்கொள்ள தலைமக்களுக்குத் தேவைப்படுவது கரணம் ஆகும். கரணம் என்பது யாதெனில் வதுவை அல்லது திருமணச் சடங்காகும்.

மகளிர்க்குரிய பண்புகளுள் முதன்மையாக இடம்பெறுவது கற்பு ஆகும்.கற்பு நிலை சங்ககாலத்தில் மகளிர்க்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டு வந்திருக்கின்றன. சங்கக் கால மகளிர் கற்பு நெறியை உயர்ந்த அறமாகக் கொண்டிருந்தனர் (நந்தினி, 2013)[8]. கற்பிற்கு விளக்கம் தரும் பெரியார், 'கற்பு' என்ற வார்த்தை கல் எனும் சொல்லிலிருந்து பிறந்தது எனக் கூறுகிறார். *'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை'* என்ற வாக்கியப்படி பார்த்தால் கற்பு என்பது சொல் தவறாமை அதாவது நாணம், சத்தியம் ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் நடப்பது ஆகும் (மணிகண்டன், 2013)[9].

இதற்கிடையே,

*கற்பென்று சொல்ல வந்தார் அதை*
*இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்*

கற்பு என்ற கருத்தாக்கம் ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானது. கற்பை ஆண், பெண் இருவருக்கும் வைக்கப்படும்போது தான் சமத்துவம் நிலைபெறுகிறது என்கிறார் பாரதியார் (மணிகண்டன், 2013)[9].

**சீவக சிந்தாமணியில் கற்பியல்**

சீவக சிந்தாமணி எனும் இக்காவியப் படைப்பு சங்கக் காலத்தில் படைக்கப்பட்ட உன்னதமான படைப்பாகும். இக்காப்பியம் சங்கக் காலத்தில் வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கம், பண்பாடு, கலை கலாச்சாரம், வாழ்க்கை நெறிகள் போன்றவற்றைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது

(இந்துமதி, 1990)[10]. சங்கக் காலத்து வாழ்க்கை நெறி என்பது கற்பியலுடன் இரண்டறக் கலந்துள்ளது எனலாம். கற்பியலைப் பற்றிப் பேசப்படாத இலக்கிய தொகுப்புகளே இல்லை எனலாம் (சண்முகன் பிள்ளை, 2004)[11]. சீவக சிந்தாமணியிலும் பெண்களின் கற்பு நெறியின் பதிவுகளைக் காணமுடிகின்றது. கற்பியலைச் சங்கக் கால மக்கள் மிக முக்கிய விழுமியங்களாகக் கொண்டனர். திருத்தக்கத்தேவர் சீவகச் சிந்தாமணியின் கதைக் களத்தில் கற்பின் முக்கியத்தைப் பகர்ந்துள்ளார். கணவன் மனைவி இடையிலான உறவே குடும்பத்தை உருவாக்கும் முக்கியத் தூணாக அமைகிறது. சீவகனின் மனைவியர் எண்மரும் கற்பியல் கூறுகளைச் செவ்வனே பற்றியுள்ளனர் எனலாம். தனது தந்தையின் நாட்டை மீட்டு தாயின் சபதத்தை நிறைவேற்ற சீவகன் அடிக்கடி தந்து மனைவியர்களை விட்டுப் பிரிந்து சென்றாலும் சீவகனின் மனைவியர் தங்கள் கணவரின் மீதான அபரிவிதமான அன்பினால் சீவகன் பிரிந்து செல்லும் தருணங்களில் கணவனின் நினைவுகளை மட்டுமே சுமந்து வாழ்ந்தனர். கனகமலையரின் இலம்பகத்தில் பாடல் 1598இல் பெண்ணின் வாழ்க்கை கணவருடன் நெருங்கிய தொடர்புள்ளது என்கிறது. இல்லறம் சிறப்புடன் அமைய கணவனும் மனைவியும் அன்புடன் வாழ்ந்தால் மட்டுமே இல்லறத்தின் பண்பையும் பயனையும் அடைய முடியும். ஆகவே, கற்பில் சிறந்த மனைவி, இல்லறம் சிறப்புற அமைய கணவனின் தவறுகளைப் பொருத்துக் கொண்டு, தனது கணவரின் விருப்பங்களைப் பின்பற்றி நடப்பாள். அதுமட்டுமின்றி, கணவரின் விருப்பத்தைத் தன் விருப்பமாக ஏற்றுக் கொண்ட பெண்ணுக்குத் திருமகளே அருள்புரிவாள் என்று

*சாம் எனில் சாதல் நோதல் தன்னவன் தணந்த- காலை*
*பூமனும் புனைதல் இன்றி பொற்புடன் புலம்ப வைகி*
*காமனை என்றும் சொல்லார் கணவன் கைத்தொழுது வாழ்வார்*
*தெ மலர் திருவோடு ஒப்பார் சேர்ந்தவன் செல்லம் தீர்ப்பார்*
*(பாடல்: 1598)*

மேற்காணும் பாடல் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆகவே, இப்பாடலின் மூலம் கணவனை மதித்து, அவரின் எண்ணங்களைச் சிந்தையில் கொண்டு செயல்படும் மகளிர் கற்பு நெறியைப் பின்பற்றினர் எனலாம்.

சீவக சிந்தாமணி காப்பியத்தில், சீதத்தன் எனும் வணிகன் பழவினையால் தனது சொத்துகள் அனைத்தும் இழந்தார். திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கொப்ப சீதத்தன் தனது மரக்கப்பலில் ஏறி வணிகம் செய்து திரும்பும் வழியில் கடலில் மரக்கப்பல் கவிழ்ந்தது. சீதத்தனை வித்தியாதரன் எனும் இளைஞன் காப்பாற்றினார். அப்பொழுது, சீதத்தன் தன் மனைவி விரதமிருந்து வெள்ளிக்கிழமை தோறும் இறைவழிபாடு செய்ததாலும் அவளது நல்வினையாலுமே தான் உயிர்பிழைத்ததாகக் கூறினார். இதைக்கேட்ட வித்தியாதரன் மனைவியை மதிக்கும் நல்மதியால்தான் சீதத்தன் உயிர் தப்பினார் என பதிலளித்தார். இச்சூழலின் மூலம் கடல் கடந்து சென்ற பின்னும், கடலின் சீற்றத்தில் சிக்கித் தவித்த போதும் சீதத்தன் தன் மனைவியை எண்ணியே கலங்குகிறார். கணவன் தன் மனைவியின் மீது கொண்டுள்ள அன்பு மற்றும் நம்பிக்கை ஓர் ஆண் தன் மனைவியின் கற்பின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது.

தொடர்ந்து, வித்தியாதரன் சீதத்தனை, வேந்தனாகிய கலுழவேகனை சந்திக்க அழைத்துச் சென்றார். அம்மன்னன் நிமித்தகன் கூறியது போல தனது மகளுக்கு இராசமபுரத்தில்தான் திருமணம் நடைபெறும் என அறிந்திருத்தார். எனவே தனது மகள் கந்தருவ தத்தையை சீவகனுக்கு மணமுடிக்க சீதத்தனுடன் அனுப்பி வைத்தார். மகளை வழியனுப்பும் போது தாய் தந்தை இருவரும் கற்பின் முக்கியத்தைக் கந்தருவ தத்தைக்கு வலியுறுத்தினர்.

*வான் தரு வளத்தது ஆகி வையகம் பிணியில் தீர்க*
*தேன் தரு கிளவியாரும் கற்பினில் திரிதல் இன்றி*
*ஊன்றுக ஊழி- தோறும் உலகின் ஊல் மாந்தர் எல்லால்*
*ஈன்றவர் வயத்தர் ஆகி இல்லறம் புணர்க நாளும்.*
*சீவக சிந்தாமணி - பாடல் 604*

உலகுவாழ் மக்களுக்கு மழை நீர் பிணி தீர்க்க உதவுவது போல் பெண்கள் தங்கள் கற்பையும் ஒழுக்கத்தையும் பேணுவதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் தொடர்ந்திருப்பதை உறுதிசெய்ய முடியும்.

அடுத்து, கந்தருவதத்தை இலம்பகத்தில் கந்தருவதத்தையை மணமுடிக்க சுயவரம் மேற்கொள்ளப்பட்டது. அச்சுயவரத்தின்தில் கந்தருவதத்தையுடன் யாழ் மீட்டும் போட்டியில் போட்டியிட்டு வெல்பவரே கந்தருவ தத்தையை மணக்க முடியும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. இப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மன்னர்களும் கந்தருவ தத்தையுடன் போட்டியிட்டு தோல்வியுற்றனர். இதைக் கேள்வியுற்ற சீவகன் யாழ் போட்டியில் கலந்து வெற்றிப் பெற்று கந்தருவ தத்தையை மணமுடித்தார். ஆனால், தோல்வியுற்ற மன்னர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சீவகனிடம் போர் புரியுமாறு கூறினர். போரில் வெற்றி பெற்றவருக்கே கந்தருவ தத்தையை சொந்தம் என வாதிட்டனர். அம்மன்னர்கள் பிறன் மனையை நோக்கவும் செய்தனர் என்பதனை "*வசை உடைத்து அரசர்க்கு எல்லாம் வழிமுறை வந்தவாறே*" என்னும் வரி உணர்த்துகிறது. ஒருவரின் மனைவியை மனதால் நினைத்துபார்ப்பதும் ஒழுக்கச் சீர்கேடு என்கிறார் திருதக்கத்தேவர். ஏனெனில், கற்பு எனப்படுவது ஆண் பெண் இருவரையும் சாரும். தீயினை தொட்டால் அதன் வெப்பம் எவ்வாறு நமக்கு தீப்புண் ஏற்படுத்துகிறதோ அதுபோல்தான் பிறர்மனைவியை நினைத்துப் பார்ப்பது கூட தீவினையை எற்படுத்தும் என நூலாசிரியர் "*முகம் படர்க வல்லே தீ தொட்டால் சுடுவது அன்றோ*" -பாடல் வரி 748 மூலம் இயம்புகிறார். ஆகவே சீவக சிந்தாமணியில் கற்பு எனப்படுவது பெண்களுக்கு மட்டுமே உரியதல்ல, ஆணின் சீலமும் பிறர் மனை நோக்காமை பண்பும் கற்பின் அங்கமாகப் பேசப்படுகிறது.

தொடர்ந்து,

*கோதை வீழ்ந்தது என முல்லை கத்திகை*
*போது வேய்ந்து இன மலர் பொழிந்து கற்பு உடை*
*மாதரார் மனம் என கிடந்த செந்நெறி*
*தாதின் மேல் நடந்தது ஓற் தனமைத்து என்பவே ( பாடல் 1208)*

இப்பாடல், பதுமையார் இலம்பகத்தில், மனையாள் மாண்பு காத்து, தர்ம நெறி தவறாது வாழும் கற்புடை பெண்களின் மனம் மகரந்ததைப் போன்றது எனப்படுகிறது. இதன்மூலம், சீவக சிந்தாமணியில் கற்பு நெறி தவறாது வாழும் பெண்களுக்கு உயரிய இடம் தரப்பட்டுள்ளது எனப்பொருள்படுகிறது.

சீவகச் சிந்தாமணியில் பாடல் 2186இல் உள்ள வரிகளின் மாற்றான் மனைவியின் மீது தவறான எண்ணம் கொண்ட ஒருவனை அவனது தவறை மீட்டுணர்ந்து அவனை நெறிபடுத்த பயன் படுத்தும் சொற்களின் கூர்மையாயானது மேதக நாட்டு மன்னன் எய்திய அம்பின் கூர்மையைப் போன்றது எனப்படுகிறது. இப்பாடலின் மூலம் கற்பெனப்படுவது நல்லொழுக்கத்தையும் சார்ந்துள்ளது எனலாம்.

ஆகவே, சீவகச் சிந்தாமணியில் ஆண் பெண் இருபாலருக்கும் எற்ற வண்ணமே கற்பை முன்வத்துள்ளார் திருத்தக்க முனிவர். கற்பு நெறி எனும் கூற்றை ஒரு பெண்ணின் சீலத்திற்கு மட்டுமே சுட்டுதல் தவறாகும். பிறர்மனை நோக்காமை, ஒருவனுக்கு ஒருத்தி எனும் கோட்பாடுகளுக்கு ஏற்ப ஆண்கள் கற்பு நெறியை வாழ்க்கை நெறியில் அமல்படுத்த வேண்டும். தொடர்ந்து, பெண்கள் இல்லற நெறியையும் வாழ்வியல் விழுமியங்களையும் போற்றி வாழுதல் வேண்டும். எனவே, சீவக சிந்தாமணியில் கற்பியல் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. மணநூல் என ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கற்புநெறியில் பிறலாது அமைக்கப்பட்ட காப்பியமே சீவக சிந்தாமணி என்பதை ஐயமில்லாமல் தெரிந்து கொள்ள முடியும்.

**மேற்கோள் நூல்கள்:**


1. Arasumani. (1985). *Perungkaapiya Thalaivan*. Chennai: Thanaletchumy Press.
2. Jebamani, M. (2013). *Seevaga Chinthamani Panpaadhu Seythigalum Vaalviyal Kuurugalum*. Chennai: Semmoodhai Padipagam.
3. Manickavasagam. (2007). *Seevaga Chinthamani*. Chennai: Tamil Nadu.
4. Vivekaandaa Gopal, R. (2013). *Panpaadu Thodramum Maadramum*. Chennai: Semmoodhai Padipagam.
5. Jeyalechumy, T. S. (2013). *Palanthamilarin Veera Panpaadu*. Chennai: Semmoodhai Padipagam.
6. Kaliyaperumal, K. (2005). *Compendium on the Culture of the Tamils*. Chennai: NGR Designers.
7. Rajam, T. (2013). *Tamil Elakkiyanggalil Mullai*. Chennai: Semmoodhai Padhipagam.
8. Nanthini, P. (2013). *Panbathil Magalir Nilai*. Chennai: Semmoodhai Padhipagam.
9. Manikandan, V. (2013). *Barathiyin Karpu Kodpadhu*. Chennai: Kalaignaan Pathipagam.
10. Inthumathi, Dr. P. S. (1990). *Mupperum Kaapiyangkalil Tharkuripedravani*. Chennai: Palkalaikalagam.
11. Shanmugam Pillai, M. (2004). *Chankat Tamilar Valviyal*. Chennai: Pavai Printers.